සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025
இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	6	විඥානය - I, II	කාලය நேரம் Time	2 மணித்தியாலம்

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

➢ **මිකප් පොරුත්තමාන විටෙයින් කීල් කෝටිටුක.**

01. சூழலில் உள்ளவற்றை வகைப்படுத்தும் இரு பிரதான பிரிவுகளும் எவை.
(1) நீரும் மண்ணும் (2) தாவரமும் விலங்கும்
(3) உயிருள்ளவையும் உயிரற்றவையும் (4) மனிதனும் கட்டிடங்களும்

02. திட்டமான வடிவமும் திட்டமான கனவளவும் உடைய பதார்த்தமொன்று பின்வருவனவற்றுள் எது ?
(1) திரவம் (2) வாயு (3) திண்மம் (4) நீராவி

03. நன்னீர் கூடிய அளவில் அடங்கியிருப்பது எந்நிலையிலாகும்.
(1) ஆறு மற்றும் குளங்களில் (2) நிலத்தடி நீராக
(3) துருவப்பிரதேசங்களில் பனிக்கட்டியாக (4) வளிமண்டலத்தில் நீராவியாக

04. நீர்வட்டம் நிகழ்வதற்கு தேவையான பிரதான சக்தி முதலாக அமைவது,
(1) காற்று (2) மின்சக்தி (3) புவிவெப்பம் (4) சூரியன்





05. பார்வைக்கு அவசியமான இரண்டு காரணிகளும் எவை ?
(1) கண்ணும் நிறமும் (2) மூளையும் உருவமும் (3) கண்ணும் ஒளியும் (4) ஒளியும் நிறமும்

06. உயிர் அங்கிகளின் தொடர்ச்சியான நிலைத்திருப்புக்கு அவசியமான உயிர் பண்பு
(1) அசைவு (2) போசணை (3) வளர்ச்சி (4) இனப்பெருக்கம்

07. வீட்டில் சக்திப் பயன்பாட்டை குறைத்துக் கொள்வதற்கு மேற்கொள்ளக் கூடிய ஒரு செயற்பாடாக அமைவது,
(1) பழைய மின்குமிழ்களை பாவித்தல்
(2) எல்லா வேலைகளுக்கும் மின்சாதனங்களை பயன்படுத்தல்.
(3) மின்சிக்கன மின்சாதனங்களை பயன்படுத்தல்
(4) பகல் வேளையில் மின்குமிழ் பயன்படுத்தல்


08. வெளிச்சுவாச வளியில் காபனீர்ஒட்சைட்டு வாயு அடங்கியுள்ளதை சோதிக்கும் போது தெளிந்த சுண்ணாம்பு நீரில் ஏற்படும் மாற்றம்.
(1) தெளிவானதாக மாறுதல் (2) அது நீல நிறமாக மாறுதல்
(3) அது பால்நிறமாக மாறுதல் (4) அது வாயுவாக மாறிச் செல்லல்

09. பூசல்மாவில் அடங்கியுள்ள மென்மைத்தன்மை காரணமாக கரம் விளையாட்டில் உராய்வை குறைக்க பயன்படுகிறது. பூசல்மாவில் உள்ள கைகளால் உணரக்கூடிய மேற்படி பௌதிக இயல்பு அழைக்கப்படுவது?
(1) வாட்டத்தகு இயல்பு (2) வன்மைத்தன்மை (3) இழையமைப்பு (4) நொருங்கும் இயல்பு


10. அளக்கும் உருளையை பயன்படுத்தி திரவக்கனவளவை அளக்கும் போது மிகப்பொருத்தமாக அளவீட்டை பெற்றுக் கொள்ளும் உரு.
(1) 
2) 
(3) 
(4) 

Past Papers Wiki

11. காந்தம் தொடர்பான பின்வரும் கூற்றுகளுல் **பிழையான** கூற்று
    (1) செம்பு, அலுமினியத்தினால் ஆக்கப்பட்ட பதார்த்தம் காந்தத்தினால் கவரப்படாது.
    (2) காந்தமொன்று எப்போதும் வடக்கு - தெற்கு திசையை நோக்கி அமையும்.
    (3) காந்தத்தின் ஒத்த முனைவுகள் ஒன்றை ஒன்று கவரும்.
    (4) வில்லைவடிவ காந்தங்கள் காந்தமுனைவு இரு பக்கங்களிலும் தொழிற்படும்.
12. காற்றாடி மூலம் மின்னை பிறப்பிக்கும் மின்உற்பத்தி நிலையம் காணப்படுவது,
    (1) நுரைச்சோலை (2) ரந்தெனிகல (3) கொத்மலை (4) புத்தளம்
13. சுயாதினமாக சுழலக்கூடிய காந்தமொன்றை பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள உபகரணம், அதன் பிரயோகம் என்பன சரியாக காட்டப்பட்டிருப்பது,
    (1) மனோமாணி - வாயு அமுக்கத்தை அளக்க (2) திசைகாட்டி - திசையை அறிந்து கொள்ள
    (3) வெப்பமாணி - வெப்பநிலையை அளக்க (4) நீரமாணி - அடர்த்தியை அளக்க
14. எளிய மின்சுற்று ஒன்றின் படம் அருகில் தரப்பட்டுள்ளது. இதில் A, B, C என்பன முறையே



    (1) ஆளி, மின்குமிழ், உலர்மின்கலம் (2) மின்குமிழ், உலர்மின்கலம், ஆளி
    (3) உலர்மின்கலம், ஆளி, மின்குமிழ் (4) உலர்மின்கலம், மின்குமிழ், ஆளி
15. சூழல் வெப்பநிலைக்கு ஏற்ப உடல் வெப்பநிலை மாற்றமடையாத விலங்கு ஒன்று
    (1) ஓணான் (2) ஆமை (3) மனிதன் (4) வண்ணத்துப்பூச்சி
16. வாயு → திரவம் எனும் நிலைமாற்றத்தை காட்டும் பொருத்தமான விடை
    (1) பனிக்கட்டி உருகல் (2) இரும்பு உருகல் (3) பனிஉருவாதல் (4) மெழுகு உருகுதல்
17. வெப்பத்தினால் சடப்பொருட்கள் விரிவடைகின்றன. வெப்ப விரிவு பயன்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாக **அமையாதது**
    (1) மாட்டு வண்டி சில்லுக்கு வளையம் பொருத்துதல்
    (2) கண்ணாடி போத்தலில் கழற்ற முடியாத உலோக மூடிகளை கழற்ற
    (3) வெப்பமாணியால் வெப்பநிலையை அளத்தல்
    (4) ஈயத்தை பயன்படுத்தி உலோகத்தை உருக்கி ஒட்டல்
18. உணவுச் சங்கிலி தொடர்பான **பிழையான** கூற்று
    (1) உணவுச் சங்கிலியின் முதலாவது இணைப்பு எப்போதும் ஒரு பச்சைதாவரமாகும்.
    (2) உணவுச் சங்கிலியில் இரண்டாவது இணைப்பு எப்போதும் அனைத்துமுன்னியாகும்.
    (3) உற்பத்தியாளரில் சேமிக்கப்பட்டுள்ள சக்தி உணவுச் சங்கிலி வழியே அடுத்த இணைப்புகளுக்கு கிடைக்கும்.
    (4) உணவுச் சங்கிலியின் இரண்டாம் படிநுகரி தாவர உண்ணியாக அமையாது.
19. வானிலை தகவல்களை பெற்றுக் கொள்ள பல்வேறு உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள உபகரணமும் அதன் மூலம் அளக்கப்படும் விடயமும் முறையே தரும் விடை




    (1) எளிய ஈரமாணி - ஈரப்பதன்
    (2) காற்றுதிசைகாட்டி - காற்றின் வேகம்
    (3) மழைமாணி - மழைவீழ்ச்சி
    (4) வெப்பமாணி - காற்றுத்திசை
20. இயற்கை அனர்தங்கள் மூலம் ஏற்படும் ஆபத்துக்களை குறைத்துக் கொள்வதற்காக
    (1) சூழல் நேயமான முறையில் செயற்பட வேண்டும்.
    (2) அனர்த்தங்கள் தொடர்பாக வெகுசன ஊடகங்கள் மூலம் விடுவிக்கப்படும் ஆலோசனைகளை பின்பற்ற வேண்டும்.
    (3) வானிலை அவதான நிலையம் மூலம் முன்வைக்கப்படும் தகவல்களுக்கு ஏற்ப செயற்பட வேண்டும்.
    (4) மேலுள்ள அனைத்தையும் பின்பற்ற வேண்டும்.

பகுதி – II

முதலாம் வினாவுக்கும் மேலும் நான்கு வினாக்களுக்கு மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

01. A. "போசணையை அடிப்படையாகக் கொண்ட இடைத்தொடர்பு" பாடத்துடன் தொடர்பாக சூழலை அவதானித்து விஞ்ஞான பாட ஆசிரியரின் ஆலோசணைக்கு ஏற்ப தொடர்பாடல் ஊடகங்களில் இருந்து பெறப்பட்ட சில படங்கள் ஒரு மாணவனால் முன்வைக்கப்பட்டது.



(இப்படங்களை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.)

(i) இப்படங்களை அடிப்படையாகக் கொண்டு 4 இணைப்பு கொண்ட உணவுச்சங்கிலி ஒன்றை எழுதுக.

(ii) இவ் உணவுச் சங்கிலியில்

a. உற்பத்தியாக்கி b. இரண்டாம் படி நுகரிகளை பெயரிடுக.


(iii) மேலுள்ள படத்தில் இருந்து

a. தாவர உண்ணி b. ஊணுண்ணி

c. அனைத்துமுண்ணி விலங்கு ஒன்று வீதம் எழுதுக.

(iv) சூழலில் வாழும் கழுகுகளின் எண்ணிக்கை குறைவடையும் போது பிற்காலத்தில் பூனைகளின் எண்ணிக்கையும் குறைவடையும். இக்கருத்தை விளக்குக.

B. வீட்டுத்தோட்டத்தில் பயிர்தாவரங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விலங்குகளை விரட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட ஒரு உபகரணம் அருகே தரப்பட்டுள்ளது.



(i) இவ்வுபகரணத்தை பெயரிடுக.


(ii) இவ்வுபகரணத்தை தயாரிக்க பயன்படுத்திய A, B பொருட்களை பெயரிடுக.

(iii) இவ்வுபகரணத்தை ஒலிக்கச் செய்வதற்கு என்ன செய்ய வேண்டும்.

(iv) சூழலில் கேட்கும் இயற்கை, செயற்கை ஒலிகள் ஒவ்வொன்று வீதம் எழுதுக.

(v) ஒலிக்கு தூண்டலுள்ள புலனுறுப்பை குறிப்பிடுக.

02. A. அங்கிகள் தமது உணவுத்தேவையை பூர்த்தி செய்வதன் அடிப்படையில் போசணை இருவகைப்படும்.





(i) படத்தில் காட்டப்பட்டுள்ள A, B போசணை முறைகளை குறிப்பிடுக.

(ii) A யில் காட்டப்பட்டுள்ள போசணை முறைக்கு தேவையான சக்தி முதல் எது ?

(iii) A யில் காட்டப்பட்டுள்ள செயற்பாடு யாது ?

(iv) விலங்குகளில் மட்டும் காணப்படும் வேறு ஒரு சிறப்பியல்பை குறிப்பிடுக.

B. சூழலின் வனப்புக்கு அங்கிப் பல்வகைமை முக்கியமானது.

(i) மீன், பச்சைக்கிளி ஆகிய விலங்குகளின் இடப்பெயர்ச்சிமுறை, கட்டமைப்பு என்பவற்றை குறிப்பிடுக.

(ii) வாழும் சூழலுக்கு ஏற்ப கீழே தரப்படும் தாவரங்களை வகைப்படுத்துக.

வலிசுனேரியா, கிண்ணை, மா, அடம்பன்

சூழல்	தாவரம்
நீர்	
தரை	

சூழல்	தாவரம்
கடற்கரை	
கண்டல்	

03. A. பல்வேறுபட்ட பதார்த்தங்களினூடாக ஒளிப்பயணம் செய்வதை அவதானிப்பதற்கான செயற்பாடு கீழே தரப்பட்டுள்ளது.



இங்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் போத்தலினுல் தூயநீர், பயன்படுத்திய கழிவு எண்ணெய், கலங்கிய நீர், நிரப்பி பரிசோதனை செய்யப்பட்டது.

(i) ஒளியகசியவிடும் இரு திண்மப் பொருட்களை எழுதுக.

(ii) கீழுள்ள அட்டவணையில் இடைவெளி நிரப்புக.

திரவம்	அவதானம்	ஊடகம் வகைப்படுத்தல்
தூயநீர்	மெழுகுவர்த்தி சுவாலை தெளிவாக தென்படும்	a) ……
கலங்கிய நீர்	b) ……	ஒளி கசியவிடும்
கழிவு எண்ணெய்	c) ……	d) ……


B. அன்றாட வாழ்வில் சக்தி பல தேவைகளுக்கு பயன்படுகிறது.

(i) சக்தி முதல் என்றால் என்ன ?

(ii) மின்னை பிறப்பிப்பதற்கு இலங்கையில் பயன்படுத்தப்படும் மூன்று சக்தி முதல்களை குறிப்பிடுக.

(iii) சக்தி முதல்களின் நிலையான பேண்தகு பயன்பாட்டுக்கு உதாரணம் ஒன்று தருக.

04. A. உவர்திறன் வேறுபட்ட மூன்று நீர்பாத்திரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



(i) A, B, C என்பவற்றுல் நன்னீர் அடங்கிய பாத்திரம் எது ?

(ii) கறியுப்பு உற்பத்திக்கு பொருத்தமான நீர்பாத்திரம் எது ?

(iii) உவர்திறன் அடிப்படையில் நீர் வகைப்படுத்தப்படும் மூன்று பிரிவுகளையும் குறிப்பிடுக.


B. அங்கிகளை வகைப்படுத்துவதற்கு பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

(i) புறத்தே தென்படும் யாதேனும் ஒரு இயல்பு உண்டு அல்லது இல்லை என்றவாறு அங்கிகள் வகைப்படுத்தப்படும் முறை எவ்வாறு அழைக்கப்படும்.

(ii) கீழே தரப்பட்டுள்ள A, B, C, D, E இலைகளை நீர் மேலே குறிப்பிட்ட முறைக்கு ஏற்ப வகைப்படுத்திக் காட்டுக.



05. A. பாரமற்ற சட்டக் காந்தம் ஒன்றுக்கு கடதாசியினால் வெட்டு எடுக்கப்பட்ட வர்ண வண்ணத்துப்பூச்சி ஒன்று ஒட்டப்பட்டு நூல் ஒன்றினால் கட்டப்பட்டு தொங்க விடப்பட்டுள்ளது.



(i) கீழே தரப்பட்டுள்ள பொருட்களுல் வண்ணத்துப்பூச்சி கவரக்கூடிய பொருளை தேர்ந்தெடுத்து எழுதுக.

⊙ செப்புக்காசி ⊙ இரும்பு ஆணி

⊙ உருக்குத் தகடு ⊙ அலுமினியக் கம்பி

Past Papers Wiki

(ii) காந்த வண்ணத்துப்பூச்சி முன், பின் அசைவதற்கு சட்டக்காந்தம் ஒன்று வண்ணத்துப் பூச்சியின் முன்னும் பின்னும் வைக்கப்படும் விதத்தை வரைந்து காட்டுக.

a. முன் புறம் b. பின் புறம்

(iii) காந்த வண்ணத்துப்பூச்சி முன்னும் பின்னும் அசைவதற்கு காரணமான விசையை (கவர்ச்சி / தள்ளுகை) தேர்ந்தெடுத்து எழுதுக.

a. முன் புறம் b. பின் புறம்

B. கம்பிச் சுருளினுல் காந்தமொன்றை அசைத்து மின்னை பிறப்பிக்க முடியும் என ஒரு மாணவன் குறிப்பிடுகிறான்.


(i) மாணவனின் கருத்து உண்மையானது என பரிசோதனை மூலம் முதன் முதலில் உறுதிப்படுத்திய விஞ்ஞானியை பெயரிடுக.

(ii) இம் முறையில் மின்னை பிறப்பித்துக் கொள்ள முடியுமான ஒரு உபகரணத்தை குறிப்பிடுக.

(iii) இலங்கையில் அனல் மின் உற்பத்தி நிலையம் அமைந்துள்ள இடத்தை பெயரிடுக.

(iv) பாடசாலை மாணவன் என்ற அடிப்படையில் உம்மால் மேற்கொள்ளக் கூடிய ஒரு நடவடிக்கையை குறிப்பிடுக.

06. A. வெப்பத்தினால் ஏற்படும் நிலைமாற்றத்தை அவதானிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட செயற்பாடு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.



(i) a. உலோகக் குழாயின் சுயாதீன முனைக்கு அருகே பற்றவைத்த தீக்குச்சி ஒன்றை கொண்டு சென்ற போது கிடைக்கும் அவதானம் யாது ?

b. இவ் அவதானத்துக்கு காரணம் எப்பௌதிக நிலையிலுள்ள மெழுகு ஆகும்.

(ii) மெழுகுவர்த்தி எரியும் போது நடைபெறும் நிலைமாற்றத்தை தருக.

(iii) வெப்பத்தினால் ஏற்படும் சூழல் பாதிப்புக்கள் இரண்டு தருக.

B. சில பிரதான நகரங்களில் பெறப்பட்ட வானிலை தகவல்கள் மாணவர்களால் பின்வருமாறு முன்வைக்கப்பட்டுள்ளன.

திகதி	உயர் வெப்பநிலை இடம்	இழிவு வெப்பநிலை இடம்	உயர் மழைவீழ்ச்சி இடம்
2024.10.20	36.4°C பொலன்னறுவை	12.3°C நுவரெலியா	9.2 mm களுத்தரை
2024.10.21	37.1°C பொலன்னறுவை	13.5°C நுவரெலியா	7.5 mm ஹினிதும
2024.10.22	36.1°C பொலன்னறுவை	12.8°C நுவரெலியா	3.8 mm நேபொட

(i) இவ் அட்டவணையின் படி உயர் வெப்பநிலை பதிவாகியுள்ள நகரம் மற்றும் அவ் வெப்பநிலையை குறிப்பிடுக.

(ii) வெப்பநிலையை அளக்க பயன்படும் உபகரணம், அலகு என்பவற்றை குறிப்பிடுக.

(iii) மழைவீழ்ச்சியை அளக்க பயன்படும் உபகரணம், அலகு என்பவற்றை குறிப்பிடுக.

(iv) காலநிலையில் செல்வாக்குச் செலுத்தும் மற்றுமொறு காரணியை குறிப்பிடுக.

(v) மழைவீழ்ச்சி குறைவதனால் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தம் ஒன்றை குறிப்பிடுக.



WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank